# கட்டுப்படியாகும் சுகாதாரக் கவனிப்பு

MINISTRY OF HEALTH
SINGAPORE

மருத்துவமனையில் சேர்க்கப்படுவது கவலை தரக்கூடியதாக இருக்கும். கவலைக்குக் காரணம் உங்கள் உடல்நலம் மட்டுமல்ல. மருத்துவமனை கட்டணங்களைப் பற்றியும் நீங்கள் கவலைப்படக்கூடும். கவலை வேண்டாம். அரசாங்கத் தள்ளுபடிகளும், மெடிசேவ், மெடிஷீல்டு, மெடிஃபண்டு எனும் 3Mகளும் உங்களுக்கு உதவும்.

## தள்ளுபடிகள்

பொது மருத்துவமனைகளில், குறிப்பாக "B2" மற்றும் "C" வகுப்புகளில் சிங்கப்பூரர்கள் தாராளமான தள்ளுபடிகளை அனுபவிக்கிறார்கள்.

அதாவது நீங்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படும்போதே உங்கள் மருத்துவக் கட்டணத்தில் பெரும்பகுதி ஏற்கனவே கட்டப்பட்டு விடுகிறது.

பரிந்துரைக்கப்படும் பண வசதிச் சோதனை முறையின்கீழ், B2/C வகுப்பு நோயாளிகளில் பெரும்பாலோர் "C" வகுப்புப் படுக்கைகளில் தங்க 80% தள்ளுபடியும் "B2" வகுப்புப் படுக்கைகளில் தங்க 65% தள்ளுபடியும் தொடர்ந்து முழுமையாகப் பெறுவார்கள்.

வகுப்பு B2/C தேர்ந்தெடுக்கும் உயர் வருமானக்காரர்களில் சிறுபான்மையினரையே பண வசதிச் சோதனை பாதிக்கும். அப்போதுகூட, அவர்களுக்குக் குறைந்தபட்சம் 50% தள்ளுபடி தொடர்ந்து கிடைப்பதோடு, அனைவருக்கும் கட்டுப்படியாகும் அளவில் கட்டணம் இருக்கும்.

உங்கள் வருமானம் எதுவாக இருந்தாலும், நீங்கள் விரும்பும் படுக்கைப் பிரிவை நீங்களே தேர்ந்தெடுக்கலாம்.

தள்ளுபடி செய்யப்பட்ட சுகாதாரக் கவனிப்பு சேவைகளை நாங்கள் தொடர்ந்து மேம்படுத்தி வரும் அதே சமயம், குறைந்த வருவாய் ஈட்டுவோரை தள்ளுபடிகளின் மையமாகக் கொள்ள பண வசதிச் சோதனை உதவும்.


நமது மருத்துவமனை கட்டணத்தைக் கட்டுப்படியாகும் அளவில் வைத்திருக்க நாம் என்ன செய்யமுடியும்?


மிகச்சுலபம். படுக்கைப்பிரிவைக் கவனமாகத் தேர்ந்தெடுங்கள். உங்களுக்கு B2 வகுப்புதான் கட்டுப்படியாகும் என்றால், அதைவிட உயர்ந்த வகுப்புக்குச் செல்லாதீர்கள்.

"C" வகுப்பாக இருந்தாலும் "A" வகுப்பாக இருந்தாலும் அனைத்து படுக்கைப் பிரிவுகளிலும் அதே பராமரிப்புத் தரம் கிடைக்கும்.

உங்களுக்கு உயர்தர மருத்துவப் பராமரிப்பு கிடைக்கும் என்பதில் நம்பிக்கை வைத்து நிம்மதி பெறுங்கள்.

2006ம் ஆண்டு நேரடி நோயாளி தள்ளுபடிகளாக $1.5 பில்லியன் வழங்கப்பட்டது. எதிர்வரும் 2012ம் ஆண்டுக்குள் இது $2 பில்லியனாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது




## மெடிசேவ்

ஆக அதிக தேவை உள்ளவர்களுக்குத் தள்ளுபடிகள் சென்றடைவதைப் பண வசதிச் சோதனை உறுதிப்படுத்துகையில், தள்ளுபடி செய்யப்பட்ட நமது கட்டணங்கள் மேலும் கட்டுப்படியாகும் அளவில் இருப்பதை மெடிசேவ் உறுதிப்படுத்துகிறது.

நம் ஒவ்வொருவரின் மெடிசேவ் கணக்குகளிலும் சராசரியாக சுமார் $13,600 இருக்கிறது என்பதும், "C" வகுப்பில் 13 முறை தங்குவதற்கு இது போதுமானது என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

நமது மருத்துவமனை கட்டணங்களைக் கட்டிட இந்தச் சேமிப்பு பெருமளவு உதவுகிறது. இதனால் கைக்காசைக் கொண்டு கட்டும் தொகை குறைகிறது.

வேலை செய்வோரின் மாதச் சம்பளத்தில் 6.5% முதல் 9% வரை தானாகவே மெடிசேவ் கணக்கில் போடப்பட்டு, நமது மருத்துவக் கட்டணங்களைக் கட்ட உதவி செய்கிறது.

அனைவரும், குறிப்பாக தேவைப்படும் போது வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்கள், மெடிசேவ் சந்தா செலுத்துவது முக்கியம்.

கொஞ்சம் கொஞ்சமாக வாடிக்கையாகச் சந்தா செலுத்தி வந்தால், உங்கள் மெடிசேவ் கணக்கின் சேமிப்பு பெருகும். தேவை ஏற்படும்போது நீங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மருத்துவமனையில் தங்கும் நோயாளிகளில் 80 விழுக்காட்டினர் தங்கள் மருத்துவக் கட்டணத்தைக் கட்ட மெடிசேவ் பயன்படுத்துகிறார்கள். பகல்நேர அறுவை சிகிச்சைகள் மற்றும் சிறுநீரக இரத்தச் சுத்திகரிப்பு, நீரிழிவு, வாதம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட வெளிநோயாளி சிகிச்சைகள் ஆகியவற்றுக்கும் மெடிசேவ் சேமிப்பைப் பயன்படுத்தலாம்.

## மெடிஷீல்டு

பெருமளவு தள்ளுபடிகளும் மெடிசேவ் சேமிப்பும் நமது மருத்துவமனை கட்டணத்தில் பெரும்பகுதியைக் கட்டிவிடும்.

ஆனால் கடுமையான நோயால் பெரிய கட்டணத்தொகை ஏற்பட்டால் என்ன செய்வது? தள்ளுபடிகளும் மெடிசேவ் சேமிப்பும் இருந்தும் கட்டணத்தைக் கட்ட முடியாவிட்டால் என்னாவது?


இதனால்தான் நாம் மெடிஷீல்டு எனப்படும் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் சேரவேண்டும். இது "B2" மற்றும் "C" வகுப்புகளின் பெரிய கட்டணத் தொகைகளில் 60 விழுக்காட்டை அடைக்கும்.

நீங்கள் உயர்ந்த வகுப்புப் படுக்கைப் பிரிவுகளில் தங்க விரும்பினால், உங்கள் தேவைக்குப் பொருத்தமான மேம்பட்ட மருத்துவக் காப்பு வழங்கும் துணைத் திட்டங்களை வாங்குவது நல்லது.

எந்தத் திட்டத்தை வாங்குவது என்று முடிவெடுக்கும்போது, நீண்டகாலத்தில் பிரிமியத்தைக் கட்ட இயலுமா, நீங்கள் தேர்ந்தெடுக்கும் படுக்கைப் பிரிவு, பெறவிரும்பும் காப்பு ஆகியவற்றைப் பரிசீலிக்க வேண்டும்.

நோய் தாக்கும்போது நீங்கள் எந்த அளவுக்குப் பாதிக்கக்கூடும் என்பது உங்களுக்குத் தெரியாது. நல்ல காப்புறுதித் திட்டம் நீங்கள் தேர்ந்தெடுக்கும் படுக்கைப் பிரிவுக்குப் போதிய மருத்துவக் காப்பு வழங்கும்.

சிங்கப்பூரர்களில் சுமார் 75 விழுக்காட்டினர் மெடிஷீல்டு அல்லது மெடிசேவ் அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஒருங்கிணைப்புத் திட்டங்களில் சேர்ந்துள்ளனர். சென்ற 2006ம் ஆண்டு, மெடிஷீல்டில் இருந்து $116 மில்லியன் தொகை வழங்கப்பட்டது.








## மெடிஃபண்டு

நம்மில் பெரும்பாலோருக்கு, மெடிசேவ் மற்றும் மெடிஷீல்டு திட்டங்களின்வழி போதிய உதவி கிடைத்து, மருத்துவமனை கட்டணங்கள் மிகவும் கட்டுப்படியாகிவிடுகின்றன. ஆனால், மெடிசேவும் மெடிஷீல்டும் இருந்தும் மருத்துவமனை கட்டணங்களைக் கட்டப் போதிய பணம் இல்லாத சிலர் இருக்கக்கூடும்.

இதுபோன்ற சிரமத்தில் நீங்கள் இருந்தால், கவலை வேண்டாம். மெடிஃபண்டு எனப்படும் நிதிப் பாதுகாப்பு வலை, உங்கள் மருத்துவமனை கட்டணத்தின் மீதித் தொகையைக் கட்ட உதவும்.

நமது பொது மருத்துவமனைகளில் மருத்துவச் சமூக சேவையாளரின் மூலம் மெடிஃபண்டு உதவிக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். சென்ற ஆண்டு, சுமார் 98% மெடிஃபண்டு விண்ணப்பங்கள் வெற்றிகரமாக உதவி பெற்றன.

வசதி குறைந்த சிங்கப்பூரர்களுக்கு மெடிஃபண்டு உதவிக்கரம் நீட்டி, அவர்களின் மருத்துவமனை கட்டணக் கவலைகளைத் தீர்க்கிறது. தள்ளுபடிகள், மெடிசேவ், மெடிஷீல்டு ஆகியவற்றுடன் யாருமே தனக்குத் தேவைப்படும் சுகாதார கவனிப்பு கிடைக்காமல் பரிதவிக்கமாட்டார்.




2006ம் ஆண்டு, வசதி குறைந்த நோயாளிகளுக்கு உதவிட அரசாங்கம் $40.7 மில்லியன் மெடிஃபண்டு மானியங்களை மருத்துவமனைகளுக்கும் தொண்டூழிய அறப்பணி அமைப்புகளுக்கும் விநியோகித்தது. சென்ற ஆண்டு, மெடிஃபண்டு நிதியில் அரசாங்கம் மேலும் $200 மில்லியன் சேர்த்து, நிதியை $1.5 பில்லியனுக்கு உயர்த்தியது.

மேல்விவரங்கள் அறிய, அன்புகூர்ந்து www.moh.gov.sg பார்க்கவும்